INDIAN JOURNAL OF TAMIL |Volume 1 |Issue 1 |Year 2020

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

RESEARCH ARTICLE

# பெண் மைய விமர்சன நோக்கில் நர்மதாவின் கவிதைகள்

**த. கவிதா** [அ]

[அ] தமிழ்த்துறை, அரசுக்கல்லூரி சித்தூர், பாலக்காடு, கேரளம்-678104 இந்தியா

# Narmada`s Poems in Gynocentric Criticism

**T. Kavitha** [a, *]

[a] Department of Tamil and Research Center, Government College, Chittur, Palakkad-678104, Kerala, India.
*Corresponding Author Email: kavithavictoria@gmail.com

(Received: 15th December 2019; Accepted: 20th Febuary 2020)
DOI: http://doi.org/10.34256/ijot2015

**Abstract:** Feminist ideologies began to emerge in the creative sphere as the feminist political conception was transformed into a literary approach. It was then that a number of artistic literature emerged that the woman was very weak, as a consumer, and acted as a supporter of the paternalistic society. In this way, many women who have full faith in feminist theory began to exhibit in their works the feminine world which the paternalistic society could not accept. Those who approached them with feminist orientation began to take the data for the next move based on the results. Some systematic approaches were used for that. One of them is the Woman Center Review.

**Key Words:** Feminist ideologies, Narmada, Criticism, Society

## முன்னுரை

பெண்ணிய விமர்சனத்திற்கும் பெண் மைய விமர்சனத்திற்கும் இடையே சிறிதளவு வேறுபாடு உண்டு. பெண்ணிய விமர்சனம் என்பது ஆண்படைப்பாளிகளின் படைப்புகளில் பெண்களின் நிலைகளைக் கண்டறிந்து விமர்சிப்பதாகும். பெண் மைய விமர்சனம் என்பது பெண்களின் படைப்புகளில் பெண்களின் நிலை குறித்த பெண்களின் விமர்சனமாகும். பெண்ணிய விமர்சனத்தில் பெண்கள் என்ன உணர்ந்தார்கள் என்பதை அறிய முடிவதில்லை. மாறாகப் பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென்று ஆண்கள் நினைத்தார்கள் என்பதையே அறிய முடிகின்றது என்னும் எலைன் ஷோவால்டரின் கருத்து இங்கு ஏற்புடையதாகின்றது. எனவே பெண் எழுத்துக்களை விமர்சிக்கும் பெண் மைய விமர்சனங்களே யதார்த்தமான முடிவுகளைத் தருகின்றன எனலாம்." என்பது (Vijayalakshmi,, 2019). அக்கருத்தினை உளங்கொண்ட நிலையில் இங்கு நர்மதாவின் கவிதைகள் ஆய்வுக்குள்ளாகியிருக்கின்றன. அதன்பயனாக நர்மதாவின் படைப்புகளில் இடம்பெறும் பெண்பாத்திரங்கள் முற்றிலும் புரிந்து கொள்ள முடியாத ஒரு சூழல்

உருவாகும்போது தான் அநிச்சையாகச் செயல்படுவதை எவ்விதம் உணர்ந்து கொள்கின்றார்கள் என்பது தெரிய வந்தது. அத்துடன் நர்மதா பெண் பற்றிய ஒரே வகை மாதிரிகளை, பிம்பங்களை படைத்துக் காட்டாமல் எவ்வாறு தலைகீழாக்கம் செய்திருக்கின்றார் ஆகியவற்றை அடையாளங்காண முடிந்தது.

அகிலத்தில் பெண்களுக்கான நீதி வேண்டி ஆண்கள் போராடிய காலங்கள் உண்டு. அவை கடந்து சென்ற நிலையில் சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலுமாக சமத்துவம் என்ற ஒன்றிற்காக பெண்களே பல்வகை ஆயுதங்களை முன்னெடுக்க ஆரம்பித்தனர். அவற்றுள் பேனா முனையாகிய ஆயுதம் கூர்மை வாய்ந்தது என்று அறிந்து கொண்ட நிலையில் அதுவே படைப்பு மனம் கொண்ட மகளிரின் மனம் கவர்ந்த ஆயுதமானது. சங்க காலத்திலேயே பெண்கள் படைப்புத் தொழிலில் வல்லவர்களாக விளங்கியவர்கள்தான். ஆனால் அதற்குப் பிறகு சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும்தான் பெண்களின் குரல் படைப்புலகில் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றது.

சங்க காலத்தில் "முட்டுவேன் கொல், தாக்குவேன் கொல்" என்னும் பெண்மொழி வழியாக பெண்களின் வலிகளும் ரணங்களும் மெல்ல வெளிவரத் தொடங்கின. அவை பன்னூறாண்டுகள் கழிந்த நிலையில் சென்ற நூற்றாண்டிலிருந்துதான் அதிகமாக புற உலகிற்குத் தெரியவர ஆரம்பித்தன. பெண்ணுலகின் விருப்பங்களை, வலிகளை பெண்களே தம் மொழியால் எடுத்துரைக்கும்போதுதான் பெண்களின் மனவெளிகள் யதார்த்தமாகும் என்ற எண்ணங்கள் மேலோங்கி வந்த நிலையில் பெண்கல்வி அதற்குக் கைகொடுத்தது. அதன்பலனாக பெண் எழுத்துகள் பரவலாக ஆரம்பித்தன. எனினும் பல பெண் எழுத்துகளில் பெண்கள் அனுபவிக்கும் வலிகளையும் வாழ்வியல் சிக்கல்களையும் அவற்றால் உண்டான வடுக்களையும் புலம்பலோடு பதிவு செய்யும் நிலையே அதிகமாகத் தென்பட்டன. அதனுடன் ஆண் படைப்பாளிகள் தங்கள் படைப்புகளில் படைத்துக் காட்டிய பெண்ணுலக மாயையில் பல பெண்படைப்பாளிகள் சிக்கிக் கொண்ட நிலையில் ஆண்கள் விரும்புகின்ற பெண்ணுலகைப் படைத்துக் காட்டி திருப்தியுற்றார்கள். அத்தகைய நிலையிலிருந்து பெண்படைப்பாளிகளை மடைமாற்றம் செய்வதற்கு உறுதுணையாக அமைந்ததொரு அரசியல் கருத்தாக்கமாக பெண்ணியம் அமைந்தது. இது பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய அனைத்துவகைச் சமத்துவத்தையும் பெற்றுத் தருவதற்காக உருவான ஓர் அரசியல் நிலைப்பாடு.

## பெண் மைய விமர்சனம் (Gynocentric Criticism)

பெண்ணிய விமர்சனத்தில் பெண் வாசகராகக் கருதப்படுவதும் பெண் மைய விமர்சனத்தில் பெண் படைப்பாளியாகக் கருதப்படுவதுமான நிலையை எலைன் ஷோவால்டர் தனது கட்டுரையில் பதிவு செய்திருக்கின்றார். அவர் பெண்கள் படைக்கும் புனைகதைகளில் வரும் சில வகைமாதிரிகளை அடையாளம் காட்டுகின்றார். அவை கீழ்வருமாறு,

### 1. அநிச்சையாக உணர்தல் (Reflective perception)

படைப்புகளில் இடம்பெறும் பெண்பாத்திரங்கள் முற்றிலும் புரிந்து கொள்ள முடியாத ஒரு சூழல் உருவாகும்போது தான் அநிச்சையாகச் செயல்படுவதை உணர்ந்து கொள்வது.

### 2. தலைகீழாக்குதல் (Inversion)

பெண் படைப்பாளிகள் பெண் பற்றிய ஒரே வகை மாதிரிகளை, பிம்பங்களை படைத்துக் காட்டாமல் தலைகீழாக்கம் செய்வது.

இந்த இரண்டு கூறுகளையும் பெண்படைப்பாளர்களின் படைப்புகளில் தேடிக்கண்டடைவதே பெண்மைய விமர்சனமாகின்றது. பொதுவாக "பெண்களின் படைப்புகளைப் படிப்பது என்பது பெண்கள் என்ன உணர்ந்தார்கள் , அனுபவித்தார்கள் என்பனவற்றை அறிவதற்கே- என்ற முடிவுகள் உணர்த்தப்படுவதை அறியலாம். இந்த உணர்த்தலிலிருந்து பெண்களின் பிரதிகளில் அவர்களுடைய அனுபவங்கள் நேரடியாக அறிவதற்குக் கிடக்கின்றன." (Raj Gowthaman, 2018) என்ற கருத்தும் பெண் மைய விமர்சனத்தின் உண்மைத்தன்மையை உணர்த்தியமைகின்றது. இத்தகைய பெண் மைய விமர்சனப் பின்புலத்தில் நின்று கொண்டு நர்மதாவின் இரு கவிதைகள் இங்கு ஆய்விற்குட்படுத்தப்படுகின்றன.

## நர்மதாவின் " நான்..பெண்"

"நான்..பெண்" என்னும் கவிதைத் தொகுப்பினை வெளியிட்ட நர்மதா இன்றைய பெண்ணியக் கவிஞர்களில் ஒருவராகக் காணப்படுகின்றார். தனி மனிதர், குடும்பம், சமுதாயம், அலுவலகம் என்று அனைத்து இடங்களிலும் பெண்ணுக்குரிய இடம் எப்படிப்பட்டது என்பதை மிக இயல்பாக எடுத்துரைக்கும் அவருடைய கவிதைகள் இன்னும் தீர்க்கப்படாத சில சிக்கல்களையும் அவற்றை லாவகத்துடன் முறியடிக்கும் வழிவகைகளையும் எடுத்துக்காட்டுகின்றன. அந்நிலையில் பெண்கள் படைத்த "பெண்ணியக் கவிதைகளில் வரும் ஏக்கங்கள், கனவுகள், பிரகடனங்கள், சவால் விடுதல், நீதி கேட்டல், எதிர்ப்பைக்காட்டல் போன்ற கூறுகளையும் அதன் பின்னணியினையும் பெண்ணிய விமர்சன நோக்கில் ஆய்வது அவசியமாகின்றது" (Vijayalakshmi, 2019) என்ற கருத்தினை ஏற்றுக் கொண்ட சூழலில் நர்மதாவின் "அவள் என்றோர் அக்கினிக் குஞ்சு", "சுட்டு விடு சூரியனே" என்ற இரு கவிதைகள் மட்டும் இங்கு ஆய்விற்குள்ளாகின்றன. முதற்கண் 'அவள் என்றோர் அக்கினிக் குஞ்சு' என்னும் கவிதைக்குள் செறிந்து கிடக்கின்ற விடயங்கள் எவை எனக் காண்போம். அக்கவிதையை பெண்மைய விமர்சனக் கண்கொண்டு அணுகும்போது மூன்று விதமான கருத்துகள் புலப்படுகின்றன. அவை பின்வருமாறு, 1.பெண்ணாக்கல் என்ற நடைமுறைகள் வழி கட்டமைக்கப்பட்ட மனைவி, 2.ஆணின் அதிகாரப்பராமரிப்பை மதித்து நடந்த கணவன், 3. பெண்ணுக்கான சுதந்திரம் மலர்ந்து கொண்டிருப்பதை சூசகமாக வெளிப்படுத்தும் பெண்ணிய மொழியியல் ஆகியனவாகும். முதற்கண் கவிதையைக் கண்போம்.

**அவள் என்றோர் அக்கினிக் குஞ்சு**

"என் கையிழுத்து

உன் மேடிட்ட வயிறு தடவச் செய்து

"ஓர் அக்கினிக் குஞ்சுக்கு அப்பா ஆகப்போகிறாய் நீ!"

என்கிறாய்.

குப்பென்று வேர்த்துப் பின்

குளிர்ந்து சிரிக்கிறேன்!

நீயும் சிரிக்கிறாய்!

அக்கினிக் குஞ்சான

அவளும் சிரிக்கிறாள்!" (Narmadha, 2019)

என்ற கவிதை பெண் குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டிருக்கும் ஒரு பெண்ணிடம் அவள் கணவன் கூறும் கூற்றாக வெளிப்பட்டிருக்கின்றது. ஆனால் கணவன் கூற்று மூலமாக மனைவியின் குரலும் அங்கே ஒலிப்பதுண்டு. இக்கவிதையில் இடம்பெறும் மனைவியின் குரல் வழியாக அவள் தன்னை அனிச்சையாக உணர்ந்து கொண்ட தன்மையையும் அதன்பயனாக அவளுடைய குழந்தை வளர்ப்பில் அவள் நிகழ்த்தவுள்ள தலைகீழாக்கத்தையும் எடுத்துரைக்கின்றாள்.

## தன்னை உணர்தலும் தலைகீழாக்கமும்

கவிதையில் நர்மதா படைத்துக் காட்டிய பெண் அநிச்சையாக அவளை, அவள் நிலையை உணர்கின்றாள் என்பதை ஆழ்ந்து சிந்திக்கின்றபோது உணரமுடிகின்றது. அவள் அனைத்துப் படைப்புகளிலும் காணப்படும் மனைவியரைப் போலவே ஒரே வகை மாதிரிக்குள் அடங்குபவள். அவள் தலைகீழாக்கம் செய்யப்பட்ட புரட்சி மனப்பாங்கு கொண்ட மனைவியாகத் தெரிகின்றாள் என்று முழுமனதோடு ஏற்றுக் கொள்வதற்கில்லை. அவளைப் பொறுத்தவரை அவள் அனைத்துப் பெண்களையும் போல தந்தைவழிச் சமூகத்தால் கட்டமைக்கப்பட்ட சுருங்கிய புழங்குவெளி, வீட்டு வேலைகளுக்குப் பயிற்சி தரும் விதத்திலான விளையாட்டு முறைகள், ஆணின் வசதிக்கேற்றவாறான கல்விமுறை முதலிய பெண்ணாக்கல் நிகழ்வுகளுக்கு உட்பட்டு சராசரி மகளாக வளர்ந்தவள். இப்பொழுது சராசரி மனைவியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றாள் என்பதற்கான சுவடுகள் நர்மதா படைத்துக் காட்டிய 'கணவனின்' மொழிகள் வழி தெரிகின்றது.

சமூகம் உயிரியல் பெண்ணைச் சமூகப் பெண்ணாக மாற்றுவதற்காக பல அடுக்குக் கட்டமைப்பு வேலைகளைச் செய்து அவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அத்தகு சூழலை எதிர்கொண்டு வளர்ந்த பெண்ணாக, ஒரே வகைமாதிரிக்குள் அடங்குகின்ற பெண்ணாக பனுவலில் இடம்பெறுகின்ற மனைவி தெரிகின்றாள். அதனால்தான் 'சுயம்' அல்லது 'தன்னிலை' என்ற கருத்துவகையைத் தங்களுக்கே பிரத்தியேகமாக இருப்பதாக

உரிமை பாராட்டி வரும் தந்தைவழிச் சமூகத்தின் பிரதிநிதியாக விளங்குகின்ற அவளுடைய கணவனுக்கு உகந்த மனைவியாக அவளால் வாழமுடிகின்றது. அதன்பயனாக பல அனுசரணைகளோடு அவனுடன் வாழ்ந்து வரும் அவளால் அவனும் பல சௌகரியங்களை அனுபவிக்கின்றான்; நிம்மதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதை கவிதையை ஆழ்ந்து உணருகின்ற நிலையில் அறிந்து கொள்ள முடியும்.

கவிதையில் இடம்பெறும் பெண் 'மனைவி' என்ற நிலையில் தான் பலவற்றை அனுசரிக்க வேண்டியவள் என்பதை அநிச்சையாக உணர்கின்றாள். அதனால் அவளுடைய வயிற்றில் வளரும் பெண்குழந்தையை பிற அன்னையரைப்போல ஒரு மென்மலராகவோ, பாதுகாக்கப்படவேண்டிய ஒரு பொக்கிஷமாகவோ அவளால் நினைக்க முடியவில்லை. தன்னைப்போல் அரைகுறைச் சுதந்திரப் பிறவியாக அல்லாமல் தன் குழந்தை முழு அளவில் சுதந்திர உணர்வோடு, சுதந்திரத்தோடு இவ்வுலகில் வாழ வேண்டும் என்று எண்ணுகின்றாள். அதற்காக தடையாக வருவனவற்றையெல்லாம் பொசுக்கி விடுகின்ற ஆற்றல் தன் குழந்தையிடம் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றாள். அதற்கேற்றவாறான விதத்தில் தன் குழந்தையை வளர்ப்பதற்கான மனநிலையை குழந்தை வயிற்றில் வளர்கின்ற போதே உருவாக்கிக் கொள்கிறாள். எனவே மென்தளிராகப் பார்க்க வேண்டிய தன் குழந்தையை 'அக்கினிக் குஞ்சாக' தலைகீழாக்கம் செய்து பார்க்கின்றாள்.

## தந்தை வழி அதிகாரத்தின் அடையாளங்கள்

கவிதை எடுத்துக்காட்டும் கணவன் தந்தைவழிச் சமூகத்தின் பிரதிநிதியாக இருந்து பின் அக்கருத்தாடலிலிருந்து மெல்லத் தன்னை விடுவித்துக் கொள்ள முயல்பவனாகத் தெரிகின்றான். அதற்கு அடையாளமாக கவிதையில் இடம்பெறும் ஒரு சொல்லாடலைக் குறிப்பிடலாம். மனைவி **"அக்கினிக் குஞ்சுக்கு அப்பா ஆகப் போகிறாய் நீ"** என்று கூறியதைக் கேட்டவுடன் முதலில் அவனுக்கு குப்பென்று வியர்த்து விடுகின்றது. **"குப்பென்று வேர்த்துப் பின் குளிர்ந்து சிரிக்கிறேன்"** என்று அவனே அவனுடைய தந்தைவழிச் சமூகச் சார்பு நிலையை வெளிப்படுத்தி பிறகு அவற்றைக் கைவிட வேண்டிய சூழல் உருவாகிக் கொண்டிருப்பதை உணர்த்தி விடுகின்றான்.

பெண்களின் தன்னிலையாக்கத்தினை விரும்பாத, ஆண்களின் அதிகாரப்பராமரிப்பினை மதித்து நடந்த, பெண்களை இரண்டாம் நிலையாகக் கருதிய கணவன் அவன். அதன்காரணமாக தனக்குப் பிறக்கவுள்ள பெண்குழந்தை மரபுசார் வளர்ப்பிற்கு அப்பாற்பட்டு, தலைகீழாக்கம் செய்யப்பட்டு வளர்க்கப்பட வேண்டிய சூழலை, 'சுயம்' விரும்புகின்ற பெண்ணாக வார்த்தெடுக்க வேண்டிய தன்மையை கருதிப்பார்த்தவுடன் முதலில் திடுக்கிட்டுப் போகின்றான். குப்பென்று வியர்க்கின்றது. தன்னுடைய தந்தை வழி அதிகாரம் அடிபட்டுப் போகுமோ, ஆணினமே அனுசரித்து நடக்க வேண்டிய நிலை எதிர்காலத்தில் வந்து விடுமோ, பெண்விடுதலையாகிய அக்கினி, பெண்ணின் 'சுயம்' என்ற வெப்பம் ஆணின் அதிகாரத்தையே பொசுக்கி விடுமோ என்றெல்லாம் எண்ணிய அளவில் வியர்த்தான். ஆனால் அந்நிலை 'காலத்தின் கட்டாயம்'

என்று கருதிப்பார்த்த நிலையில் மனம் 'குளிர்ந்து' சிரிக்கிறான்.

'அவன்' இதுவரை தந்தைவழி அதிகாரத்தைச் செயல்படுத்தி வரும் ஒரு சராசரிக் கணவனாக இருந்தவன். இனி அதே அதிகார மனப்பாங்கில் தனக்குப் பிறக்கப்போகும் பெண் குழந்தையை வளர்க்க நினைத்தவன். ஏனெனில் "ஒரு குழந்தை பிறந்தவுடன் 'என்ன பையனா, பெண்ணா?' என்ற முதல் கேள்வியிலேயே அது எதிர்பாலியல் அதிகாரக் களத்துக்குள், அதில் இயங்கும் பண்பாட்டுச் சொல்லாடலுக்குள் நுழைந்து விடுகிறது". (Perundevi, 2019) அத்தகைய சூழலை எதிர்நோக்கியிருக்கும் அவன் சட்டென்று மனைவியால் அவனுடைய பெண்குழந்தை "அக்கினிக் குஞ்சென்று' அடையாளப்படுத்தப்பட்டவுடன் மனதளவில் ஆடிப்போகின்றான். பிறகு 'தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும்' என்பதற்கேற்ப 'என்னுடைய குழந்தை' என்ற நினைவு வந்தவுடன் 'குளிர்ந்து' போகின்றான். மட்டுமின்றி தந்தை வழிச் சமூகத்தின் அதிகாரத்தை இறுக்கமாகப் பயன்படுத்த முடியாத காலச்சூழலில் அவன் வாழ்ந்து கொண்டிருப்பதால் தன் மனைவியை ஓரளவு சுதந்திரத்துடன் வாழ்வதற்கான சூழ்நிலையை விட்டுக் கொடுத்தவனாகவும் தெரிகின்றான். அதனால்தான் மனைவி "நீ" என்று அவனைச் சுட்டிய நிலையில் அதை ஏற்றுக் கொள்ளுகின்ற மனநிலையில் தெரிகின்றான்.

நர்மதா சுட்டிக்காட்டும் மனைவியைப் பொறுத்தவரை தந்தைவழிச் சமூகம் கட்டமைத்த பண்பாட்டுத் தளத்திற்குள் இயங்குகின்றவளாகத் தெரிந்தாலும் தந்தைவழிச் சமூகத்தின் இறுக்கமான பிடியிலிருந்து மெல்ல விடுபட்டுக் கொண்டிருக்கும் பெண்ணாக அவளைக் காண வழியுண்டு. ஏனெனில் அவள் சிறிதளவாவது 'தன்னிலையை' உணர்ந்த நிலையில் சுயச்சார்புடைய பெண்ணாக இருக்க வேண்டும். ஆனால் தான் வாழும் சமூகச் சூழலில் தன்னை முழுமையாக 'தன்னிலை' பெற்றவளாக காட்டிக் கொண்டால் சில வாழ்வியல் இடர்பாடுகளைச் சந்திக்க நேரிடும் என்ற அச்ச உணர்வால் சராசரி மனைவியாக தன்னைத் தக்க வைத்துக்கொண்டு வாழ்ந்து வருபவள் என்று புரிந்து கொள்ள வேண்டியதாகின்றது. ஏனெனில் அவள் தந்தை வழிச் சமூகத்தால் வளர்க்கப்பட்டவள். அதனால் அவளையும் அறியாமல் அவளுக்குள் சமூகம் குறித்த ஒருவித அச்ச உணர்வு படிந்து கிடக்கத்தான் செய்யும். எனவே எதிர்காலத்தில் தனக்குப் பிறக்கும் பெண் குழந்தை முழுநிலையில் 'தன்னிலை'யடைந்த தன்மையுடன் வளரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றாள். அதன்பொருட்டு என்னென்ன தடைக்கற்கள் உருவாகின்றதோ அவற்றையெல்லாம் உடைத்தெறிகின்ற ஆற்றலுடன் அக்குழந்தை திகழ வேண்டும் என்று ஆசைப்படுகின்றாள். அவளுடைய ஆசைகளைத் தெரிந்து கொள்வதற்கு அவள் பயன்படுத்தும் மொழிகளே சான்றுகளாகின்றன.

## பெண்ணிய மொழியியல்

பெண்ணிய ஆய்வுகளுக்கு உதவக் கூடிய காரணிகளில் மொழிக்கு இன்றியமையாத இடமுண்டு. "அனைத்து வகையான கருத்துக்களும் மொழி என்னும் ஊடகம் (Medium) வழியாக உள்வாங்கவும் பரவலாக்கம் பெறவும் செய்வதால், முதலில் மொழித்தளத்திலுள்ள பால்வேறுபாடுகள், எதிராடல்கள், சொல்லாடல்கள் போன்ற

வற்றையும் கண்டறிவது அவசியமான பெண்ணிய அணுகுமுறையாக அமைகிறது“ (Vijayalakshmi, 2019) என்ற த விஜயலட்சுமியின் கருத்தினை உளங்கொண்ட நிலையில் இத்துறையில் ஆழமான ஆய்வுகளை மேற்கொண்ட ஜூலியா கிறிஸ்தவா என்னும் பல்கேரிய நாட்டவரின் மொழியியல் செய்திகளையும் கவனிக்க வேண்டியுள்ளது.

ஒரு கருத்தை ஓர் ஆண் கூறுவதிலும் அதையே ஒரு பெண் கூறுவதிலும் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிந்து பால்களுக்கிடையிலான அதிகார, அடிமை உறவுமுறைகளைக் கண்டறிய முடியும் என்று ஜூலியா கிறிஸ்தவா கருதுகின்றார். நம் இந்தியப் பண்பாட்டை பொறுத்தவரை ஆண் பயன்படுத்தும் மொழிகளில் அதிகார தொனியும் பெண் பயன்படுத்தும் மொழிகளில் அடிமைத்தனமும் புதைந்து கிடப்பதை த விஜயலட்சுமியும் சுட்டிச் செல்வதுண்டு. ”மொழியமைப்பும் மொழிப்பயன்பாடும் ஒவ்வொரு சமூகப் பயன்பாட்டின் அடையாளமே”. (Vijayalakshmi, 2019) ஒருவருடைய உளநிலையைப் புரிந்து கொள்ள அவர் பயன்படுத்தும் மொழியே தக்க கருவியாக அமையும். அந்நிலையில் நர்மதா படைத்துக் காட்டும் மனைவியானவள் ஓரளவு தன்னிலையடைந்தவள்; பெண் சுதந்திரத்தை வாழ்த்தி வரவேற்கக் காத்திருப்பவள் என்பதை அறிந்து கொள்ளும் தன்மையில் அவள் வயிற்றில் வளரும் பெண் குழந்தை பற்றி கணவனிடம் குறிப்பிடும்பொழுது ”அக்கினிக் குஞ்சு” என்று குறிப்பிடுகிறாள்.

அக்கினி அனைத்தையும் பொசுக்குவது போல வருங்காலப் பெண்கள் தங்கள் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகத் தோன்றுவனவற்றை பொசுக்கி விடுவார்கள் என்பதை அச்சொல்லாடல் வாயிலாகப் புலப்படுத்த முனைகின்றாள். சிறு பொறி பெருநெருப்பாகி விடும் என்ற முழுநம்பிக்கை இருப்பதால்தான் ’குஞ்சு’ என்ற சொற்பிரயோகத்தைப் பயன்படுத்துகின்றாள். பாரதி வைத்த அக்கினிக்குஞ்சினால் காடு வெந்து தணிந்ததை போல தன் மனைவி கோடிட்டுக் காட்டிய எதிர்கால மகளிரின் வியத்தகு மாற்றங்களை கணவன் மனதளவில் சிந்தித்தவுடன் ’வியர்த்து’ பிறகு ’குளிர்கின்றான்’. அதனால் ஆணிற்கான அதிகார உணர்வு மறைந்த நிலையில் மனைவி ‘அப்பாவாகப் போகிறாய் **நீ**‘ என்று ஒருமையில் தோழமையுணர்வுடன் குறிப்பிட்டதையும் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கின்றான். அவளும் ’நீங்கள்’ என்று மரியாதையுடன் குறிப்பிடுவதைத் தவிர்த்த நிலையில் ஆணும் பெண்ணும் சமம் என்பதை உணர்த்துகின்ற வகையில் ஒருமையை பயன்படுத்துகிறாள்.

வருங்காலப் புதுமை பெண்ணின் தந்தையாகப் போகின்ற ஆண் ’சிரிக்கிறேன்!’, ’சிரிக்கிறாய்!’, ’சிரிக்கிறாள்!’ என்று கூறுவதன் மூலம் ஒட்டுமொத்த மனித சமுதாயமே மகளிருக்கான வாழ்வியல் விடியலை, பூரண சுதந்திரத்தை முழுமனதோடு ஏற்றுக் கொள்ளும் என்பதான நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றான். இங்ஙனம் “அவள் என்றோர் அக்கினிக் குஞ்சு” என்ற கவிதையானது பெண்ணாக்கல் சுவடுகளுடன் வாழ்ந்து வருகின்ற ஒரு ’மனைவி’ அனிச்சையாக தன்னை உணர்ந்து கொண்ட நிலையை வெளிப்படுத்தியது. ஆணின் அதிகாரப் பராமரிப்பு அடையாளங்கள் மெல்ல மறைந்து போகும் என்பதை எடுத்துக் காட்டியது. அதனுடன் பெண் தன் மென்மைத்தன்மையிலிருந்து விடுபட்டு அக்கினியாக மாறவேண்டிய தலைகீழாக்கச் சூழலை உணர்த்தியது. அடுத்ததாக

“**சுட்டுவிடு சூரியனே**” என்னும் கவிதை வெளிப்படுத்தும் பெண்ணின் அநிச்சை உணர்வு மற்றும் தலைகீழாக்கம் பற்றிக் காண்போமாக.

**சுட்டுவிடு சூரியனே**

”மழைக்காலச் சூரியனாய்

மசமசவென்றிராதே

கோடைச் சூரியனாய்

கொதித்துத் தகித்திடு

அடியோடு பொசுங்கட்டும்

அடிமை நோய்க் கிருமிகள்!”

என்ற கவிதையில் ’பெண்’ பற்றிய பார்வையில் ஏற்பட்டிருக்கும் ’அநிச்சை உணர்வினை’ உணரமுடிகின்றது.

## அநிச்சையாக உணர்தல்

“சுட்டுவிடு சூரியனே” என்ற கவிதையின் கூற்றாளர் வாழ்வியல் அனுபவங்கள் அதிகமுள்ள ஒரு பெண் என்று தெரிகின்றது. கேட்போராக வருபவரும் ஒரு பெண்ணே. அவள் அனுபவங்களின் விளிம்புகளில் நின்று கொண்டிருக்கும் ஓர் இளம்பெண். கூற்று நிகழ்த்துகின்ற பெண் தற்போதைய பெண்களின் நிலையினை எண்ணிப் பார்க்கின்றார். இந்த நிலையை இப்படியே விட்டால் பெண் அனைத்து நிலைகளிலும் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு ஆண்களுக்கான நுகர்பொருளாகச் சுருங்கி விடுவாள் என்பதை அறிகின்றார். அடிமைநோய் பெண்களின் சுயத்தினைக் கொன்று தின்றுவிடும் ஆட்கொல்லியாக வளர்ந்து விடும் என்று உணர்கின்றார். அதனால் இனிவரும் இளந்தலைமுறைப் பெண்கள் ஆட்கொல்லியாகிய அடிமைத்தனத்தைச் சுட்டுப் பொசுக்கி விடும் சூரியனாக மாற வேண்டும் என்று ஆணையிடுகின்றார். இவ்வாறு அநிச்சையாக பெண்களின் நிலையினை உணர்ந்த கூற்றாளர் இனிவரும் பெண்கள் மரபுவழி வளர்ப்புமுறையிலிருந்து மாறுபட்டு தலைகீழாக்க நிலையில் வீரியத்தோடு வளரவேண்டும் என்று கேட்போராகிய பெண்ணிடம் உறுதிபட உரைக்கின்றார்.

## தலைகீழாக்கம்

பொதுவாகப் பனுவல்கள் ஆண்களைச் சூரியனாகவும் பெண்களை நிலவாகவும் உருவகித்துக் காட்டுதல் மரபு. ஆண் என்றால் வெப்பம். பெண் என்றால் குளிர்ச்சி என்றவாறு இணை எதிர்வுகளாக காலந்தோறும் படைத்துக் காட்டப்பெறும் சூழ்நிலையில் நர்மதா வழக்கத்திற்கு மாறாக பெண்ணை சூரியனாக தலைகீழாக்கம் செய்து பார்க்கின்றார். அதுவும் மழைக்காலச் சூரியனைப் போல மசமசவென்றிருக்காமல் ‘கோடைச் சூரியனாய் கொதித்துத் தகித்திட வேண்டும்’ என்கின்றார்.

பெண் ஏன் கோடைச் சூரியனாய் கொதித்துத் தகிக்க வேண்டும்? பெண்ணைப்

பீடித்துக் கொண்டிருக்கும் அடிமை நோய்க்கிருமிகள் அனைத்தும் பொசுங்கிக் கருகுவதற்காக. இங்கு அடிமை நோய்க் கிருமிகள் என்று எவை உருவகிக்கப்படுகின்றன என்று பார்க்கின்றபோது பெண்ணினுடைய வளர்ச்சிக்கு எதிரானதாகக் காணப்படும் அனைத்தும் நோய்க் கிருமிகள்தான். பெண்ணிற்கான புழங்குவெளிக் குறைப்பு, பெண்ணினுடைய அறிவை மழுங்கடிக்கச் செய்யும் உள்ளடி வேலைகள், அச்சம், நாணம், மடம் என்ற குணநலன்களுக்குள் பெண்ணை அடக்கிப் பார்க்கும் தன்மை, அவள் செய்யும் பணிகளனைத்தும் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகின்ற விதம், அதனால் உருவாகும் ஊதியக் குறைவு, பெண்ணை நுகர்பொருளாகக் காணுகின்ற ஆணின் ஆணவச் செயல்பாடு, உடல்புனிதம் என்ற ஒன்றினை பெண்ணுக்கு மட்டும் உரியதாக்குதல், ஆணென்றால் அதிகாரம் பெண்ணென்றால் பலவீனம் என்ற கருத்துவகை, பொருளாதாரச் சுதந்திரமின்மை முதலான பலவகை சமூக நோய்க்கிருமிகளைப் பொசுக்கி அழிக்கும்பொருட்டு பெண் கோடைச் சூரியனாய் கொதித்துத் தகிக்க வேண்டும் என்கின்றார் கவிஞர்.

மேற்கண்ட பெண்ணடிமைக் காரணிகள் அனைத்தும் மரபுவழிப் படைப்பாளர் களால் பண்பாட்டுப் போர்வையாக பார்க்கப்படுகின்ற நிலையில் நர்மதா அவற்றை பெண்ணியக்கண்கொண்டு பார்த்தநிலையில் பெண்ணைப் பீடிக்கும் நோய்க்கிருமி களாகத் தலைகீழாக்கம் செய்கின்றார்.

## முடிவுரை

நர்மதாவின் கவிதைகளை பெண்மைய விமர்சனக் கண் கொண்டு ஆய்வு செய்த நிலையில் "அவள் என்றோர் அக்கினிக் குஞ்சு" என்ற கவிதையானது பெண் இன்னும் விட்டு விடுதலையாக வேண்டிய சூழலில் எதிர்கால சுதந்திரச் காற்றை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பதைப் புலப்படுத்துகின்றது. "சுட்டுவிடு சூரியனே" என்ற கவிதையானது பெண்ணனவள் அவளைப் பீடித்திருக்கும் அடிமை நோய்க்கிருமிகளிலிருந்து விடுபட வீரியத்தோடு சுயவைத்தியம் செய்து கொள்ள வேண்டிய தருணத்தில் இருக்கின்றாள் என்பதை உணர்த்துவதாகத் தெரிகின்றது.

## References

Narmadha, (2019), I am female, Padi Veliyeedu, Chennai, India.

Perundevi, (2019), udal paal porul, Kalachuvadu Pathipagam, Nagercoil, India.

Raj Gowthaman, (2018), Feminism: History and Principles, New Century Book House, Chennai, India.

Vijayalakshmi, T., (2019), Feminism-A research Approach, Piral Journal, October Editon.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License